பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 18

# ஜனாதிபதியின் கூற்றுக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்டனம்




காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்கப்படும் என ஐ.நா மன்றில் சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்த கூற்றை வன்மையாக கண்டிக்கிறோம் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் அமைப்பின் இணைப்பாளர் கலாறஞ்சினி தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் நேற்றுடன் 1675 ஆவது நாளாக எமக்கு நீதி கோரிய தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் உள்ளோம். நூற்றுக்கு மேற்பட்ட, எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்த சகோதர சகோதரிகளை இழந்து விட்ட நிலையிலும், எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம் என்ற முனைப்புடன் உள்ளோம். இந்த நிலையில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கை ஜனாதிபதி அங்கு ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ அவர்களுடன் (19.09.2021) விசேட சந்திப்பில் ஈடுபட்டிருந்தார். அவர் அங்கு இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ்களும், நட்ட ஈடும் கொடுப்பது பற்றி கூறியிருந்தார். (03)

# பல்கலைக்கழக நுழைவுக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி வெளியானது

புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 2020 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழக நுழைவுக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம் வெளிடப்பட்டுள்ளது. அத்துடன், பல்கலைக்கழக Z - Score அடுத்த மாதம் வெளியாகும் என பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பான மேலதிக விபரங்களை https://ugc.ac.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது முறையாக ஜஸ்டின் ட்ரூடோ பிரதமரானார்



திங்களன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்கு வெற்றியை வழங்கியுள்ளார்கள். 49 வயதாகும் ட்ரூடோ. மறைந்த தனது தந்தை Pierre Trudeauவுக்குப் பின் 2015ஆம் ஆண்டு முதன்முறையாக பிரதமரானார்.

பின்னர். 2019இல் நடைபெற்ற தேர்தலில் ட்ரூடோவின் லிபரல் கட்சி 157 இருக்கைகளைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற 170 இருக்கைகள் தேவை. ஆகவே. வெற்றி பெற்றாலும். ட்ரூடோ அரசு பெரும்பான்மை பெறவில்லை. அதேபோல். இந்தத் தேர்தலிலும் அதே 157 இருக்கைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளது லிபரல் கட்சி. அதாவது. இம்முறையும் பெரும்பான்மை பெறவில்லை ட்ரூடோவின் லிபரல் கட்சி. (03)

# பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் தயார்

200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாட சாலைகளில் ஆரம்பப் பிரிவுகளில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கல்வி அமைச்சகத்திற்கு சுகாதார வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவுக்கு உரிய வழிகாட்டு தல்கள் வழங்கப்பட்டதாக வைத்தியர் அசேல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

# 2 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப்பை வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது ராஜஸ்தான்

ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் தொடரின் 32வது லீக் ஆட்டம் துபாயில் நடைபெற்றது. இதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டொஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணி கெப்டன் கே.எல். ராகுல் பந்து வீச்சை தேர்வு செய்தார். 03)



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

### இலங்கையில் கொவிட் பரவல் மற்றும் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

எதிர்வரும் ஒக்டோர் 01ம் திகதி வரை இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும். நாட்டில் மக்கள் நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதாவது அத்தியாவசியத் தேவைகளுக்காக நடமாடலாம் என்கிற நடைமுறை இருக்கிறது. இந்நிலையில் 200இற்கும் மேல் நாளாந்தம் கொவிட் மரணங்கள் சம்பவித்து வந்தபோதிலும் தற்போது 100க்கும் குறைவான மரணங்களே நாட்டில் நாளாந்தம் பதிவாகி வருகின்றன. அதேவேளை மூவாயிரத்திற்கும் அதிகமான நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை காணப்பட்ட போதிலும் தற்போது இவ்வெண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேநிலை நீடித்தால் ஒக்டோர் 01ஆம் திகதியாகும் போது ஓரளவு கொவிட் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரலாம் என நம்பலாம். எனினும் மருத்துவர்கள் இன்னமும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நாட்டில் மதுபான சாலைகளை திறந்துள்ள செயற்பாட்டை கண்டித்துள்ளனர். இது கொவிட் கொத்தணிகளை மீண்டும் உருவாக்கும் நடவடிக்கையாகக் கூட அமைந்துவிடலாம். எனவே அரசு இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். வீழ்ச்சி ஏற்படும் போது மீண்டும் அதிகரிப்பதற்கான வேலைகளைச் செய்தல் நியாயமா?

தொடர்ந்தும் நாட்டை மூடி வைக்க முடியாது. இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் உற்பத்திக்குத் தேவையான உர இறக்குமதியும் தடைசெய்யப்பட்டுள்ளது. மக்கள் வேலை வாய்ப்புக்களை இழந்து வீடுகளில் முடங்கிக் கிடக்கும் நிலையில் மிக விரைவில் இந்நாடு பழைய நிலைக்கு வரவேண்டுமெனில் உச்சக்கட்ட அளவில் சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும். அதற்கும் அரசு ஆக்கபூர்வமாக வேலைகளை தொடர்ந்து செய்யவேண்டும்.

விரைவில் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நாட்டு மக்கள் அனைவரும் கொவிட் தொற்று விடயத்தில் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

## வேறுவகை தடுப்பூசிக்காக காத்திருப்பது பஸ்ஸை ஓடவிட்டு பின்னர் கையை காட்டும் நிலைக்கே சென்றுவிடும்

**காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர்**

**(நூருல் ஹுதா உமர்)**

சினோ.்.பார்ம் தவிர்த்து வேறு தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் இன்னும் நிச்சயிக்காத நிலையில் கையிலிருக்கும் தடுப்பூசியை தவறவிட்டு வேறு ஒரு தடுப்பூசியை பெற காத்திருப்போரின் நிலை பஸ்ஸை ஓடவிட்டு பின்னர் கையை காட்டும் நிலைக்கே சென்றுவிடும். கைவசமிருக்கும் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள இளைய சமுதாயம் முன்வர வேண்டும். நாட்டில் வேகமாக பரவிக் கொண்டு வரும் கொரோனா அலையிலிருந்து எம்மை நாம் பாதுகாத்து கொள்ள வேண்டும். அனைவரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர். பொது சுகாதார பரிசோதகர்கள். குடும்ப நல உத்தியோகத்தர்கள். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள். பிரதேச சபை. நுளம்பு கள தடுப்பு பிரிவினர் இணைந்து 20 தொடக்கம் 29 வயதானவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்வுகள் 04 நிலையங்களில் நடைபெற்றது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் 20 தொடக்கம் 29 வயதானவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தடுப்பூசியேற்றலில் 330 பேர் நேற்று தடுப்பூசியினை பெற்றுள்ளனர்.




**நாட்டில் மேலும் 66 கொவிட் மரணங்கள் நேற்று (21.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,284 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1321 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 507,330 ஆக அதிகரித்துள்ளது.**

## மீண்டும் விலைகளில் அதிகரிப்பு ஏற்படலாம்

**பால்மா, கோதுமை மா, அரிசி, சீமெந்து ஆகியவற்றின் விலை அதிகரிப்பு தொடர்பில் இந்த வாரம் இறுதி தீர்மானம் எட்டப்படவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார். உலக சந்தையில் ஏற்பட்டுள்ள பொருள் விலைகளுக்கு ஏற்ப விலைகளை அதிகரிக்குமாறு இறக்குமதியாளர்கள் கோருகின்றனர். எனினும், அதற்கான உரிய அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை.**

**எவ்வாறாயினும், உலக சந்தையில் நிலவும் விலை அதிகரிப்புக்கமைய பால்மா, கோதுமை மா, அரிசி, சீமெந்து ஆகியவற்றின் விலைகளை சிறிதளவேனும் அதிகரிக்க நேரிடும். எனவே அது தொடர்பில் இந்த வாரம் இறுதி தீர்மானம் எட்டப்படவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார்.**

## விரைவில் 12-19 வயதினருக்குத் தடுப்பூசி

**நாட்பட்ட நோய்களை கொண்ட 12 – 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். அதற்கமைய, கொழும்பு – சீமாட்டி றிட்ச்வே சிறுவர் வைத்தியசாலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (24) முதல் குறித்த நபர்களுக்கு பைஸர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.**

## உர இறக்குமதித் தடையால் தேயிலை பாதிப்பு

*இரசாயன உர இறக்குமதி தடையால், தேயிலை உற்பத்தியின் அளவு குறைவடைந்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.*

*இந்த நிலையில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, அதில் 30 சதவீத இலங்கை தேயிலையைக் கலந்து மீள் ஏற்றுமதி செய்யும் நடைமுறையை அறிமுகப்படுத்தி உள்ளதாகவும், இதனால் தரமற்ற இலங்கை தேயிலை சர்வதேச சந்தைக்கு செல்லும் வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

## இன்றும் மழை பெய்யும் சாத்தியம்

சப்ரகமுவ. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி. நுவரெலியா. காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடமத்திய. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## சிவில் சமூக இயங்குதளத்தின்...

[நேற்றைய இதழின் தொடர்ச்சி...]

இன முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வு ஒன்றின் தேவையை நாம் மீள வலியுறுத்துகின்றோம். இன முரண்பாடு காணப்படுவதை தொடர்ச்சியாக மறுத்து வருகின்றமை ஒரு நீண்ட கால யுத்தம் மற்றும் பாரிய உயிரிழப்பு என்பவற்றுக்கு வழிவகுத்திருந்தது. இன முரண்பாடொன்று காணப்படுவதை ஏற்றுக்கொள்வதே அவ்வாறான தொடர் செயன்முறை ஒன்றின் முதற் படி நிலையாக அமையும். இதன் விளைவுகளில் ஒன்றாக, அரசாங்கம் கடந்த கால அரசியலமைப்பு சீர்திருத்தங்களில் உரிய கவனம் செலுத்தப்படாமை மற்றும் முழுமையான ஆலோசனைச் செயற்பாடுகளில் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளை கருத்திற்கொள்ளப்படாத நிலை என்பன ஏற்பட்டன. இதற்கு மாறாக, அரசாங்கம் புதிதாக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமாக "தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பவற்றில் ஏற்படுத்த வேண்டிய பொருத்தமான சீர்திருத்தலை" அடையாளம் காண்பதன் ஊடாகவே மீண்டும் அரசியலமைப்பின் சில அம்சங்களை சீர்திருத்த முனைகின்றது. இத்தொடர் செயன்முறை குறித்து மிகவும் குறைவான தகவல்கள் காணப்படுவதுடன் இவ்விடயம் தொடர்பில் ஆலோசனைகள் பெறப்படா நிலை மற்றும் உள்வாங்கும் தன்மை காணப்படா நிலை என்பன வரலாற்று ரீதியாக மனக்குறைகளைக் கொண்டுள்ள தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு பற்றி எந்தவித நம்பிக்கையையும் ஏற்படுத்தாது. உள்வாங்கும் தன்மை மிக்க மற்றும் ஆலோசனை பெறப்பட்டு மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்று அவசியமாகவுள்ள நிலையில், நீண்ட காலமாக பிற்போடப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறும் அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் நாம் அரசாங்கத்தைக் கோருகினறோம்.

**2019 ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் தாமதம்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு வழிவகுத்த செயலிழப்புகள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள பல குழுக்கள் காலத்துக்கு காலம் நியமிக்கப்பட்டபோதும் இவ்விசாரணைகளில் பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளது, அத்தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் கத்தோலிக்க சமூகத்தின் மத்தியில் அதிருப்திகளைத் தோற்றுவித்துள்ளதுடன் அச்சமூகம் பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களின் தலைமையில் தனது அதிருப்திகளை வெளியிட்டு வருகின்றது. மேலும், இத்தாமதம் முஸ்லிம் சமூகம் மீதான எதிர்மறைச் சித்தரிப்பை அதிகமாக்குவதில் பங்களிப்பு வழங்குவதுடன் இதன் காரணமாக அச்சமூகம் தொடர்ச்சியான பாகுபாட்டுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றது.

**முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்புபட்ட தாமதங்கள்**

முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துமாறு கோரி முஸ்லிம் பெண்கள் தொடர்ச்சியாக பே–ாராடி வருகின்றனர். நீண்ட காலத்துக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய இச்சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடு விரைவுபடுத்தப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

**கொவிட் தொற்று நோயினால் இறந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கான உரிமைகள்**

ஏற்கனவே காணப்படும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளை அரசியல்மயமாக்குவதற்கு இந்த தொற்று நோயினை அரசாங்கம் பயன்படுத்தியமை தொடர்பில் நாம் கவலையடைகின்றோம். மொத்த மரணங்களில் கால்வாசி மரணங்கள் முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுவதுடன் இன்றுவரை கொவிட் தொற்றினால் மரணமடையும் அம்மக்களின் உடலங்களை அடக்கம் செய்வது சிக்கல் தன்மை வாய்ந்ததாகவும் வலியினை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அடக்கம் செய்ய அனுமதியளிக்கப்பட்ட ஒரேயொரு இடம் [ஓட்டமாவடி] தற்போது நிரம்பியுள்ளது. ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய தகனம், அத்துடன் தற்போது ஒட்டு மொத்த சமூகத்துக்கும் அடக்கம் செய்வதற்கு ஒரேயொரு இடம் கிழக்கில் வழங்கப்பட்டுள்ள நிலை என்பன காரணமாக பல முஸ்லிம்கள் சிகிச்சை நிலையங்களுக்கு செல்லத் தயங்குகினற்னர். மாறாக, அவர்கள் வீடுகளிலேயே துன்பப்பட்டு மரணமடைய விரும்புகின்றனர். இந்த சூழ்நிலையில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு நல்லடக்க சாலையை வழங்கி அவ்விடங்களில் ஆழத்தில் அடக்கம் செய்வதை அனுமதிப்பது முஸ்லிம்கள் மற்றும் நல்லடக்கத்தை விரும்பும் மக்கள் அடையும் துன்பத்தினை அகற்றும் செயற்பாடாக அமையும்.

மேலுள்ள வாக்குமூலம் தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் யதார்த்தங்களின் அடிப்படையில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டதாகும்.

[நாளைய இதழில் தொடரும்...]

## ஜனாதிபதியின் கூற்றுக்கு...

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தில் நேரடியாக சர்வதேசத்தினாலேயே குற்றம் சாட்டப்பட்ட. சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும்படி ஐ.நா மனித உரிமை ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட சிறிலங்காவின் ஜனாதிபதியை. அதே ஐ.நா மன்றில் சர்வதேச சமூகம் இன்று வரவேற்று கைலாகு கொடுப்பதை நாம் கவலையுடனேயே உற்றுநோக்குகின்றோம். வேறு வழியின்றி எமது கடைசி நம்பிக்கையாக சர்வதேச நீதி பொறிமுறையே இருப்பதால். இந்த இராஜதந்திர சம்பிரதாயங்களையும் தாண்டி சர்வதேசம் பாதிக்கப்பட்ட எமக்கு நீதியை பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம். இவ்விடயத்தில் ஐ.நா வின் செயலாளர் உட்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் நீதி பொறிமுறை தொடர்பாக கேள்வி எழுப்பாமை பாதிக்கப்பட்ட எமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது.

2009. மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து பாதுகாப்புத் தரப்பினரதும். அரசினதும் உறுதிமொழிகளை நம்பி எமது உறவுகளைக் கையளித்தோம். எம் முன்னிலையில் எமது உறவுகள் சரணடைந்தனர். கண்கண்ட சாட்சிகளான நாம். எமது உறவுகளை மீட்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஒரு நாளாவது விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தாலோ அல்லது அவர்களுடன் உறவு பேணியிருந்தாலோ சரணடையுங்கள் அல்லது எம்மிடம் ஒப்படையுங்கள். நாம் புனர்வாழ்வளித்து மீண்டும் உங்களிடம் ஒப்படைப்போம் என்று உறுதியளித்த படையினரதும். அரசினதும் பாதுகாப்புச் செயலர் தற்போது ஜனாதிபதியாக உள்ளார். நாம் எமது உறவுகளை உயிருடனேயே கையளித்தோம். எனவே அவரும் எங்கள் உறவுகளை புனர்வாழ்வளித்து எம்மிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். மாறாக உள்நாட்டிலும். ஐ.நா. தலைமையகத்தில் வைத்தும் மரணச் சான்றிதழும். நட்டஈடும் கொடுத்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறுவது புத்த தர்மத்துக்கு ஏற்புடையதா? இக்கூற்றை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு புத்தபெருமானின் போதனைகளை பின்பற்றும் மற்றும் மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் இதைக் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறோம்.

மேலும் உள்ளகப் பொறிமுறையில் எமது பிரச்சினையைத் தீர்ப்பதென்பது கடல் வற்றிக் கருவாடு சாப்பிடுவதற்கு ஒப்பானது. இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதோ அரிது. அப்படியிருந்தும் அரிதாக ஓரிரு வழக்கில். நீதி வழங்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் ஜனாதிபதி அவர்களுக்கு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கி விடுவார். அத்துடன் அவர்களை மேலும் இது போன்ற கொலைகளைச் செய்யத் தூண்டும் விதத்தில் ஊக்குவிப்பாகப் பதவி உயர்வும் வழங்குவார்கள். உதாரணத்துக்கு அண்மையில் மிருசுவில் 8 பேர் கொலையில் மரண தண்டனை விதிக்கப் பெற்ற சுனில் ரத்னாயக்க. எனவே எமக்கு மரணச் சான்றிதழும் வேண்டாம். காணாமல் போனோர் அலுவலகமும் வேண்டாம். இழப்பீடும் வேண்டாம் திருப்பித் தருவதாகக் கூறி பொறுப்பேற்ற எம் உறவுகள் எமக்கு வேண்டும். அதற்கான நீதி இழுத்தடிப்பு இல்லாமல் ஐ.நா.வால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## மூன்றாவது முறையாக...

இதற்கிடையில் மொன்றியலில் வெற்றியுரை ஆற்றிய ட்ரூடோ, மக்கள் தங்களை மீண்டும் பணிக்குத் திரும்ப அனுப்புவதையே இந்த வெற்றி காட்டுவதாக தெரிவித்தார். இந்த கொரோனா காலகட்டத்தைக் கடந்து பிரகாசமான ஒரு எதிர்காலத்துக்கு செல்லும்படி நீங்கள் எங்களை பணிக்குத் திரும்ப அனுப்புகிறீர்கள். உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், அதற்குப் பின்பும் உங்களுக்கு ஆதரவாக நிற்பார்கள். கனேடியர்களால் எந்த தடையையும் தாண்டிச் செல்ல முடியும், அதைத்தான் நாங்கள் தொடர்ந்து செய்ய இருக்கிறோம் என்றார்.

அத்துடன், ட்விட்டரில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், வாக்களித்ததற்காகவும், லிபரல் குழுவினர் மீது வைத்த நம்பிக்கைக்காகவும், பிரகாசமான ஒரு எதிர்காலத்தைத் தேர்ந்தெடுத்ததற்காகவும் கனடாவுக்கு நன்றி. கொரோனாவுக்கெதிரான போராட்டத்தை முடிக்கப்போகிறோம். கனடாவை முன்னோக்கி அழைத்துச் செல்லப்போகிறோம், எல்லாருக்காகவும் என்று குறிப்பிட்டுள்ளார் ஜஸ்டின் ட்ரூடோ.

## 02 ரன் வித்தியாசத்தில்...

அதன்படி முதலில் பெட் செய்த ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவரில் 185 ரன்கள் எடுத்து ஓல்–அவுட் அனது. லீவிஸ் 36 ரன், ஜெய்ஸ்வால் 49 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர். கெப்டன் சஞ்சு சாம்சன் 4 ரன்னில் வெளியேறினார்.

மஹிபால் லோம்ரோர் அதிரடியாக ஆடி 17 பந்தில் 2 பவுண்டரி. 4 சிக்சர்களுடன் 43 ரன்கள் விளாசினார். ரியான் பராக் 4 ரன், ராகுல் டெவாட்டியா 5 ரன்னிலும் கிறிஸ் மோரிஸ் 2 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். பஞ்சாப் அணி சார்பில் அர்ஷ்தீப் சிங் 5 விக்கெட்டும். ஷமி 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து. 186 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் கேஎல் ராகுல். மயங்க் அகர்வால் பொறுப்புடன் ஆடினர். அகர்வால் அதிரடியாக ஆடி அரை சதம் கடந்தார். பஞ்சாப் அணியின் எண்ணிக்கை 120 ஆக இருந்தபோது கே.எல்.ராகுல் 49 ரன்னில் அவுட்டானார். அவரை தொடர்ந்து சிறிது நேரத்தில் மயங்க் அகர்வால் 67 ரன்னில் வீழ்ந்தார். அடுத்து இறங்கிய மார்கிராம், நிகோலஸ் பூரன் இணைந்து பொறுப்புடன் ஆடினர். பூரன் 32 ரன்னில் அவுட்டானார். இறுதியில். பஞ்சாப் 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 183 ரன்கள் மட்டுமே எடுத்து தோற்றது. மார்கிராம் 26 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இதன்மூலம் கடைசி ஓவரில் 2 ரன்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் திரில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருது கார்த்திக் தியாகிக்கு அளிக்கப்பட்டது. (அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## சுற்றுலாப் பயணிகளுக்கு அமெரிக்காவில் அனுமதி

முழுமையாக கோவிட் தடுப்பூசி போட்டுக் கொண்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அதன்படி வரும் நவம்பர் மாதம் முதல் அமெரிக்கா செல்லும் வெளிநாட்டினர் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றிதழையும், விமானம் ஏறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன் எடுத்த கொரோனா நெகட்டிவ் சான்றையும் அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகள் தங்களைத் தனிமைப்படுத்த தேவையில்லை என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதே வேளை எந்தவகையான தடுப்பூசிகள் அங்கீகரிக்கப்படும் என்று தெளிவாக வரையறுக்கப்படவில்லை என கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதித் தேர்தலில் குத்துச்சண்டை வீரர் போட்டி

உலக அளவில் மிகவும் பிரபலமான குத்துச்சண்டை வீரர்களில் ஒருவரான மேனி பக்கியோவ் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். 42 வயதான பக்கியோவ் குத்துச்சண்டையில் உலக அளவில் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார். மேனி பக்கியோவ் 2010ம் ஆண்டு முதல் பிலிப்பைன்ஸ் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் போட்டியிட உள்ளேன் என குத்துச்சண்டை வீரர் மேனி பக்கியாவ் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நான் ஒரு குத்துச்சண்டை வீரன். களத்தில் மட்டுமில்லாமல் களத்துக்கு வெளியிலும் நான் போராடுவேன். பிலிப்பைன்சில் மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார்கள். அவர்களது ஆதரவுடன் ஆட்சி அமைப்பேன் என தெரிவித்துள்ளார். பக்கியாவ் சார்ந்துள்ள பிடிபி-லபான் கட்சியின் மற்றொரு அணி, தற்போதைய அதிபர் ரோட்ரிகோ டுடோதேவை துணை அதிபராக முன்மொழிந்துள்ளது. அதற்கு டுடோதேவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.



## ஒராண்டில் 6.35 இலட்சம் பேர் புலம்பெயர்வு – ஐ.நா

'ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், அங்கிருந்து நடப்பு ஆண்டில் மட்டும் 6.35 லட்சம் மக்கள் புலம்பெயர்ந்து உள்ளனர்' என ஐ.நா தெரிவித்துள்ளது.ஐ.நாவின் மனிதநேய விவகாரங்களுக்கான கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ஆப்கானில் 2021ம் ஆண்டில் ஏற்பட்ட போர், வறுமையால் இதுவரை 6.35 லட்சம் மக்கள் அந்நாட்டை விட்டு வெளியேறி அண்டை நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து உள்ளனர்.குறிப்பாக, காபூலில் இருந்து வெளியேறிய 1,300 பேருக்கும், குனார் மாகாணத்தில் இருந்து வெளியேறிய 9,300 பேருக்கும் ஐ.நா., சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. அதேபோல், மைதான் வார்தாக் மாகாணத்தைச் சேர்ந்த 63 ஆயிரம் பேர் புலம்பெயர்ந்து உள்ளனர். அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்க இருக்கிறோம்.

புலம்பெயரும் மக்களுக்கு உணவு, குடிநீர் உள்ளிட்ட உதவிகளும் மருத்துவ, கொவிட் பரிசோதனை, தடுப்பூசி செலுத்துதல் ஆகியவற்றையும் வழங்க ஐ.நா., அதிக முன்னுரிமை அளிக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## கொரோனா பயண கட்டுப்பாடு: பிரிட்டன் மீது இந்தியா அதிருப்தி




பிரிட்டன் அறிவித்துள்ள கொரோனா பயணக் கட்டுப்பாடுகளுக்கு இந்தியா அதிருப்தி தெரிவித்துள்ளது. ஐரோப்பிய நாடான பிரிட்டன் கொரோனா தொடர்பாக இந்தியாவுக்கு புதிய பயணக் கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. இது, இந்தியாவில் மிகப் பெரிய சர்ச்சையை கிளப்பி உள்ளது. ஐ.நா., பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் எலிசபெத் டிரசை சந்தித்து பேசினார். அப்போது பிரிட்டனின் புதிய கொரோனா விதிமுறைகள் குறித்து இந்தியாவின் அதிருப்தியை அவர் தெரிவித்தார். இது குறித்து ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள 'டுவிட்டர்' செய்தியில் கூறப்பட்டு உள்ளதாவது: பிரிட்டனின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சர் எலிசபெத் டிரசை சந்தித்தேன். இருவரும் 2030ம் ஆண்டுக்கான முன்னேற்ற திட்டங்கள் குறித்து பரஸ்பரம் கருத்துகளை பரிமாறினோம்.

ஆப்கான், இந்தோ – பசிபிக் விவகாரங்கள் குறித்து ஆக்கப்பூர்வமாக இருவரும் விவாதித்தோம். பிரிட்டன் அறிவித்து உள்ள கொரோனா பயண கட்டுப்பாடுகளால் ஏற்படும் பாதிப்பு குறித்து எடுத் துரைத்தேன். புதிய விதிமுறை பிரிட்டன் வரும் இந்தியர்கள் தனி மைப்படுத்திக் கொள்ளும் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பது இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் என கூறினேன் என அதில் கூறப்பட்டுள்ளது. பிரிட்டன் அறிவித்த புதிய பயண விதி முறைகளின்படி இரண்டு 'டோஸ்' கொரோனா தடுப்பூசி மருந்தான, 'கோவிஷீல்ட்' செலுத்தியிருந்தாலும், இந்தியர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்றே கருதப்படுவர். அவர்கள் பிரிட்டனுக்கு வரும் பட்சத்தில் 10 நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒக்.,4 முதல் அமலுக்கு வர உள்ள, பிரிட்டனின் இந்த புதிய விதிமுறைகள் இந்தியாவில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளன.

இந்தியாவில் தயாரிக்கப்படும் 'கோவிஷீல்ட்' தடுப்பூசியை அங்கீகரிக்க பிரிட்டன் மறுப்பது பாரபட்சமானது. இதனால் இந்தியர்கள் பிரிட்டனுக்கு செல்ல முடியாத நிலை ஏற்படும். இந்த பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண முடியாத பட்சத்தில், இந்தியாவும் உரிய பதில் நடவடிக்கையை எடுக்கும். இது குறித்து, இந்திய – பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் பேசியுள்ளனர். அதில், பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என பிரிட்டன் உறுதி அளித்துள்ளது.